முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1601

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.02.2024**, வெள்ளிக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா வாழ்க
கலியுகத்தின் ஞான வள்ளலே வாழ்க
பேருலகை உலகமாற்றம் நிகழ்த்தும் வண்ணமாக
பிரணவக்குடில் படைத்து அருளுகின்ற குருராஜனே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 04 ம் நாள், 16.02.2024, வெள்ளிக்கிழமை)
ஊழ்போக்கி உலகை மீட்கும் மகா சக்தியாக
உயர்வான தர்மத்தை செய்து வருவதாலே
3. இந்த கலியுக மக்களெல்லாம்
தாழ்விலா மேல்நிலை அடைந்து
தரணியில் தர்மவான்களாக
தவராஜன் நீ தேர்வு செய்கின்ற ஞானவான்களாக
4. அவரவரும் நிலைகள் உயர்ந்து சிறந்து
அகிலத்தில் அற்புதம் படைப்பர்
அரங்கன் உன் வழியே இந்த மாற்றம் நிகழ்த்த ஆமுகன் யான்
உன்னோடு சூட்சுமமாய் இணைந்து பேரற்புதம் நிகழ்த்தி வருகின்றேன்
5. வருகவே அரங்கனை கண்ட மக்களுக்கு
வல்லமைபட அரங்கன் கரத்தால் தீட்சை பெற்ற மக்களுக்கு
முருகப்பெருமான் என் அருளும் ஆசியும்
முழுமையான ஞானமும் உண்டுஉண்டு
6. உண்டான பிரணவக்குடில் தொடர்பு கூட்டி
உலகத்தில் தர்மத்தை செய்பவரெல்லாம்
கொண்டதொரு இந்த கலியிலே
கூறிடுவேன் அழியாமை பெற்று சிறக்க நேரும்

7. குரு அரங்கன் உண்டாக்கும்
ஞான ஆட்சிக் காலத்தில்
தொண்டர்களாக தொடர்புகொண்டு
இனிதே பதவி மாந்தர்களாக
8. விந்தைபட தர்மத்தை கையில் கொண்டு
வினவிட உலகத்தை மாற்றும் சக்திமிக்கவர்களாக தேறி
அரங்கன் வழி அனைவரும் ஞானிகளாவர்
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–